## ஸ்ரீ காஞ்சி ஆசார்யர் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளுரை:

மனிதப் பிறவியில்தான் ஒருவன், தன் முன் வினைகளைக் குறைத்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. கர்மாக்களை அனுஷ்டித்து அதன்படி நடப்பதன் மூலம், துன்பங்களைக் குறைத்துக் கொள்ள முடியும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

கர்ம சிந்தாந்தத்தின் அநேக கோட்பாடுகளுள் மிகவும் உயர்ந்த தானது ஒவ்வோர் ஆணும், பெண்ணும் நெற்றியில் விபூதியோ, திருநாமமோ, சந்தனமோ, அல்லது குங்குமமோ இட்டுக் கொள்வதை ஒரு சம்ஸ்காரமாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

பகவானை ஒருவனுக்கு ஞாபகப்படுத்தவும் உதவுகிறது நெற்றிக்கு அடையாளம் வைப்பது. மற்ற மதங்களில் இல்லாத ஒரு சிறந்த வழக்கம் இது. பெண்களிடையே நெற்றிக்குக் குங்குமம் இட்டுக்கொள்வது இப்போதெல்லாம் ஒரு 'பாஷன்' போல் ஆகிவிட்டது. சின்னச் சின்ன விஷயங்களில்கூட நாம் சிரத்தை எடுத்துக்கொள்ள முடிவதில்லை.

வரும் துன்பத்தைத் தடுப்பது இயலாத ஒன்று. ஆனால் அத்துன்பத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். சமஸ்காரங்களைக் கடைப்பிடிக்க, துன்பங்கள் அழிந்துக்கொண்டே போகும். நமக்கு இவை ஒரு கவசமாக இருந்து துன்பங்களிலிருந்து காப்பாற்றும்.

முன் ஜன்ம வினைகளுக்கு ஏற்பதான் அடுத்தடுத்து ஜன்மங்கள் ஏற்படும் என்பது நம் ஹிந்து மதத்தின் கொள்கைகளில் ஒன்று. ஒரு மனிதப் பிறவி எடுப்பதன் மூலம், அதில் செய்கின்ற கர்மானுஷ்டானங்களுக்கேற்ப அடுத்து வரும் பிறவிகள் தோன்றுகின்றன.

ஒரு பிறவியில் செய்யும் பாபகாரியங்களினால் அடுத்துப் பல நீச ஜன்மங்கள் எடுத்து, அதன் மூலம் கர்ம சேஷங்கள் முடிந்ததும் பிறகு அடுத்த மனிதப்பிறவி வரும். அம் மனிதப் பிறவியில் நல்லது செய்யின் முக்தி கிடைக்க வழி ஏற்படுகிறது. இல்லையாயின் மறுபடியும் பல நீசப் பிறவிகள் வரும்.

ஒரே மனிதப் பிறவியில் ஞானியாகிவிட்டான் என்பது துர்லபம். மகரிஷிகள்தான் அப்படி ஒரே பிறவியில் ஞானியாகிறார்கள்.

அடுத்தடுத்து மனிதப் பிறவி வந்து விட்டதே என்று கவலைப்பட அவசியமில்லை. மாறாக, நல்ல தர்மங்களைச் செய்ய இன்னுமொரு முயற்சி மேற்கொள்ள சந்தர்ப்பம் வாய்த்தது என்று மகிழ்ச்சி அடையவேண்டும்.

கடவுள் நம்மை வஞ்சிப்பது என்பது எப்போதும் கிடையாது. நமக்கு உள்ளதைத்தான் நம் வினைகளுக்கேற்ப கொடுப்பார். ஒருவனுக்கு அதிகமான துன்பங்களைக் கொடுப்பது என்பது கடவுளின் சங்கல்பம் அல்ல.

ஒருவன் தனக்கு ஏன் இவ்வளவு அதிகமான துன்பங்கள் வருகின்றன என்று நொந்துகொள்வது அவனுடைய அறியாமையால்தான்.

ஆண்கள் கச்சம் வைத்து வேஷ்டி கட்டிக் கொள்வது ஹிந்து தர்மத்தில் கூறப்பட்டு உள்ள ஒன்று. வடநாட்டில் சிறு பிராயம் முதற்கொண்டே கச்சம் கட்டுவது வழக்கமாக இருக்கிறது. நம் தமிழ்நாட்டில் அது மாறி விட்டது. தினமும் கச்சம் கட்டிக்கொள்ள முடியாவிட்டாலும், கர்மாக்கள் செய்யும் தினங்களிலாவது அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அதே போலத்தான் ஆண்-பெண் இருவரும் காது குத்திக் கொள்வதும், ஹிந்து மதத்தின் கோட்பாடுகளில் மற்றொன்று. பெண்கள் காதுகுத்திக்கொள்வது குறைந்து வருகிறது. இது தர்மம் இல்லை.

[சென்னை மேல மாம்பலம் அசுவமேத மகாமண்டபத்தில் வழங்கியது]